[1978 செப்டம்பர் 12

கைத்தறி நெசவாளர் முன்னேற்றத்திற்குச் சிறப்புத் திட்டம்.

* வினா எண். 174—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காக மாஸ்டர் பிளான் போடப்பட்டுள்ளதா?

(ஆ) மாவட்ட வாரியாக எங்கெங்கே போடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) மாநிலம் முழுவதிலும் கைத்தறி நெசவாளர்கள் அதிக மாக உள்ள இடங்களைக் கருத்திற் கொண்டு இந்தத் திட்டங்கள் போடப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாக போடப்படவில்லை.

அவிநாசி வட்டத்திலுள்ள தமிழ்நாடு நூற்பு ஆலைகள்.

* வினா எண். 175— திரு. செ. ந. பழனிசாமி: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவினாசி தாலுக்காவிலுள்ள தமிழ்நாடு நூற்பு ஆலை கடந்த ஒரு வருடமாக மூடிக்கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அரசு எடுத்து நடத்தும் உத் தேசம் உண்டா?

(இ) பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இதுவரை ஏதேனும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) & (ஆ) நிதி நெருக்கடியின் காரணமாக 25-10-1976 முதல் 16-4-1978 வரை அவினாசி தாலுக்காவிலுள்ள தமிழ்நாடு நூற்பு ஆலை மூடப்பட் டிருந்தது. 17-4-1978 முதல் திருப்பூரிலுள்ள சென்கோ டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தினர் இந்த ஆலையை குத்தகை க்கு எடுத்து நடத்தி வருகிறார்கள்.

(இ) இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை, உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS